**சிறுநாணய ஐக்கிய கூடுகை**

**ஆராதனை முறைமை - 2024**

**சுய பராமரிப்பு புவியின் பராமரிப்பு**

சிறுநாணய ஐக்கிய சேகரிப்பு ஆராதனை முறைமை பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டியாக சிறுநாணய ஐக்கிய சர்வதேச குழுவினரால் கொடுக்கப்பட்டுள்ளது. திருச்சபைகளும், பெண்கள் குழுக்களும் தங்களுடைய வசதிக்கேற்ப பாடல்களையும், கலந்துரையாடும் வழிமுறைகளையும் தெரிந்து கொள்ளலாம். (உதாரணம் : நாடகமாக்கல், செய்தி, விளக்கக், காட்சி, சிறு குழு விவாதங்கள் போன்றவை).

ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் வழக்கமாக நடத்தப்படும் சிறுநாணய ஐக்கிய சேகரிப்பு ஆராதனையை நடத்துவதற்கு ஏதுவாக, ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதம் இந்த ஆராதனை முறைமை வெளியிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. மேலும், உங்கள் பிராந்திய கிறிஸ்தவ ஒன்றிப்பு அமைப்பின் பங்காளிகள், பெண்கள் குழுக்கள் மற்றும் திருச்சபையார்கள் தங்களது குழுக்களின் தேவைகளுக்கேற்ப ஆராதனையை நடத்த வேண்டும்.

'ஜெப வட்டம்' (Circle of Prayer) தொகுதி. 27ன் கருத்தான 'எங்களை குணமாக்கும், எங்கள் உலகை குணமாக்கும்: சுய பராமரிப்பு என்பது புவியின் பராமரிப்பு' என்பதைத் தழுவி இந்த ஆண்டுக்கான நமது கருப்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. நாமும் இந்த பூமியின் ஒரு பங்காக இருப்பதால், சுயபராமரிப்பு என்புது புவியை பராமரிப்பதுக்கும், புவியை பராமரிப்பு என்பது நம்மை பராமரிப்பதுக்கு சமானம். நம்மையும், நமது புவியையும் குணப்படுத்துகின்ற பணியில் பிறரோடு இணைந்து நாமும் செயல்படுவோம். கடவுளின் அழகான படைப்பை சரிசெய்வதில் கடவுளுடன் இணைந்து செயல்படுவோம்.

இந்த ஆராதனை முறைமை குறித்த உங்களின் கருத்துக்கள் மற்றும் தனிப்பட்ட நிகழ்வுகள், கதைகள், தங்களுடைய ஆராதனை புகைப்படங்கள் ஆகியவற்றை சிறு நாணய ஐக்கிய சர்வதேச குழு வரவேற்கின்றது. உங்களின் கருத்துக்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்: icfkph@gmail.com உங்களின் வழிபாடு அர்த்தமுள்ள அனுபவமாக இருக்கட்டும்.

**ஆயத்தம்:**

கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்ற சிலுவையைக் கொண்டு ஆலய பலிபீடத்தின் மையத்தை அலங்கரித்து, பாரம்பரியமான துணி ஒன்றை விரித்து, அதன்மேல் வேதாகமத்தை திறந்து வைத்து சிலுவையின் முன்பாக வைக்கவும். இடது புறத்தில் ஒழுங்கின்மையாய் இருப்பது போன்ற ஒரு மாதிரியை உருவாக்கி (காட்டுத் தீ, மரங்களற்ற மலைச்சரிவு, மண் அரிப்பு, நிலநடுக்கம், வெள்ளம், பஞ்சம், வறட்சி போன்றவை...), வலது புறத்தில் சமாதானமும், அமைதியும் நிறைந்த இயற்கை காட்சி மற்றும் ஒரு சமநிலை சூழல் போன்ற மாதிரியை அமைக்கவும்.

ஏழு பெண்கள் தங்கள் தேசத்தின் பாரம்பரிய உடையில் பின்வரும் சின்னங்களை சுமந்து வர வேண்டும்.

- மெழுகுவர்த்தி
- தண்ணீர்
- மண்
- ஆகாயத்தைக் குறிக்கும் அடையாளங்களில் ஒன்று (சூரியன், சந்திரன், மேகங்கள், நட்சத்திரங்கள்)
- தாவரங்கள்
- மிருகங்களையும், மனிதர்களையும் குறிக்கும் அடையாளங்களில் ஒன்று
- உடைந்த மண்பானை

மென்மையான இசை இசைக்கப்படும்போது, ஆலய நுழைவுவாயிலில் இருந்து ஆறு பெண்கள் நடனமாடிக் கொண்டு பலிபீடத்தை நோக்கி ஆடி வர வேண்டும். தாங்கள் கொண்டு வந்த அடையாளப் பொருட்களை பலிபீடத்தின் முன் வைப்பதற்கு முன்பாக, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியை வாசிப்பதற்காக பலிபீடததின் முன் வரிசையாக நிற்க வேண்டும்.

**ஆராதனை நடத்துபவர்**: வானங்கள் கர்த்தரின் மகிமையை கூறுகின்றன! ஆகாயமானது கர்த்தரின் கைவேலைப்பாடுகளை பறைசாற்றுகின்றன.

**சபையார்:** எங்கள் படைப்பாளரான கடவுளின் உறுதியான அன்பைக் கொண்டாடுகின்றோம். நிச்சயமாக, கடவுள் அணைத்து படைப்புகளிடத்திலும் உண்மையுள்ளவர்.

**ஆ.ந.:** சூரியன் உதிப்பது முதல் அஸ்தமனமாகும் வரை, படைப்புகள் உரையாடுகின்றன.

**சபையார்:** இரவும், பகலும் கடவுளின் செயல்களை பூமியின் உயிரினங்கள் அறிவிக்கின்றன.

**ஆ.ந:** கடவுளின் கட்டளைகள் தெளிவானவை, அது இருதயத்தை அறிவூட்டுகின்றது. கடவுளின் சட்டம் நேர்த்தியானவை, அது நமது சிறந்தவைகளைக் கொடுக்குமாறு நம்மை அழைக்கின்றது.

**சபையார்:** நம் மத்தியில் இருக்கும் கடவுளின் தூய பிரசன்னத்திற்கு உங்கள் இருதயங்களைத் திறவுங்கள். கடவுளின் வழிகாட்டுதலுக்கு எங்கள் வாழ்வை திறந்து கொடுக்கின்றோம்.

(எதற்கு இந்த ஆராதனை என்பதை விளக்கும் பின்னியுடன் வரவேற்பும், வாழ்த்துக்களும் கூறவும்)

**தியானம்** :

**பெண் 1 (வெளிச்சம்)**: ஆதியிலே கடவுள் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். எங்கும் இருள் இருந்தது. வெளிச்சம் உண்டாகக்கடவது என்று கடவுள் கூறினார். வெளிச்சம் உண்டாயிற்று. கடவுள் அதை நல்லதென்று கண்டார்.

**பெண் 2 (தண்ணீர்):** பின்பு தேவன், தண்ணீரின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் கூறினார். அவ்வாறே கடவுள் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பெயரிட்டார். அது நல்லது என்று கடவுள் கண்டார்.

**பெண் 3 (மண்):** பின்பு கர்த்தர் வானத்தின் கீழ் இருக்கிற தண்ணீர் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. கடவுள் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த தண்ணீருக்கு சமுத்திரம் என்றும் பேரிட்டார். பின்பு கடவுள் பூமியானது புல்லையும், விதையை பிறப்பிக்கும் தாவரங்களையும், மரங்களையும், விதையையுடைய கனிகளைத் தரும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. கடவுள் அது நல்லது என்று கண்டார்.

**பெண் 4 (ஆகாயம்)**: பின்பு கடவுள் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக, வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும் நாட்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக் கடவது என்றார். கடவுள் பகலை ஆளப் பெரிய சுடரையும், இரவை ஆளச் சிறிய சுடரையும் உருவாக்கினார். அது அப்படியே ஆயிற்று. கடவுள் அது நல்லது என்று கண்டார்.

**பெண் 5 (தாவரங்கள்):** பின்பு கடவுள் நீந்தும் ஜீவிஜந்துக்களையும், வானத்தில் பறக்கும் பறவைகளையும், தண்ணீரானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார். கடவுள் மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின் படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழ் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதிஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

**பெண் 6 (மிருகங்கள் / மனிதர்கள்):** பின்பு கடவுள் பூமியானது ஜாதிஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும் ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார். பின்பு கடவுள், நமது சாயலாக மனிதனைப் படைப்போம், அவன் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். அனைத்துத் தாவரங்களையும், மனிதர்களுக்கு உணவாகக் கொடுத்தார். அது அப்படியே ஆயிற்று. கடவுள் தான் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது.

**பாடல்:**

**சிறிது நேர மௌனமான தியானம் :**

**பெண் 7 (உடைந்த பானை)**: நமது வாழ்விடமான பூமித்தாய் உடைந்த பானைக்கு ஒப்பிடப்படுகிறது. பூமியை பராமரிக்கும்படி கடவுள் நமக்குக் கொடுத்த கடமையை செய்யத் தவறியதனால் பேரழிவுகளினாலும், பிற சிக்கலினாலும் சூழப்பட்டுள்ள

நமது தாய்ப் பூமியை அடையாளப்படுத்தும் விதமாக இந்த உடைந்த பானையை நாங்கள் சமா்ப்பிக்கிறோம். பறவைகள் அழிந்து கொண்டிருக்கின்றன, புல் உலா்ந்து கொண்டிருக்கின்றது. நீரில் உள்ள நச்சுத் தன்மை நமது குழந்தைகளை கொல்லுகின்றது. சுயலாபத்திற்காக சொா்க்கமாகிய இந்த பூமி அழிக்கப்பட்டது. கடவுள் இப்பூமி இழந்த நன்மையைக் கண்டாா். படைப்பின் நன்மதிப்பை இழப்பதை நாம் காண்கிறோம், கேட்கிறோம், அனுபவிக்கிறோம். வானத்துக்கும் பூமிக்கும் இடையே உள்ள அனைத்துப் படைப்புகளின் உடன்படிக்கையும் முறிந்தது. பூமியானது பேராசையினாலும் தீமையினாலும் ஆளப்படுகிறது. (கடவுள் இப்பூமி இழந்த நன்மையைக் கண்டாா். போா், பசி, பாரபட்சம், விரக்தி, நோய், காலநிலை நெருக்கடி, நிலநடுக்கம், வெள்ளம், சுனாமி, சூறாவளி ஆகியவைத் தீவிரமாக உள்ளன.)

**சிறிது நேர மௌனமான தியானம்:**

**பாவ அறிக்கைக்கான அழைப்பு:**

**ஆ.ந.:** வாழ்வளிப்பவரே, கொள்ளையடிக்கப்பட்ட பூமியின் மத்தியில் இருந்து படைப்புகளோடு நாங்கள் கூக்குரலிடுகிறோம்.

**சபையாா்:** எங்கள் மேல் கிருபையாயிரும்.

**ஆ.ந.:** வாழ்வளிப்பவரே, நச்சுக் கலந்த தண்ணீரின் மத்தியிலிருந்து படைப்புகளோடு இணைந்து நாங்கள் கூக்குரலிடுகிறோம்.

**சபையாா்**: எங்கள் மேல் கிருபையாயிரும்.

**பெண்கள்:** எங்களுக்குள்ளும், எங்கள் அயலகத்தாரோடும் சமாதானத்தை உருவாக்குவதற்கான வழியை நாங்களே கண்டுபிடிக்கத்தக்கதாக நீா் இந்த பூமியை உருவாக்கி இருக்கின்றபடியால், போரை நிறுத்தும்படியாய் உம்மிடத்தில் நாங்கள் மன்றாட இயலாது.

**ஆண்கள்:** உலகமனைத்திற்கும் உணவளிப்பதற்கான வளங்களை நீா் ஏற்கனவே எங்களுக்கு அருளியிருக்கிறபடியினால், பசியை ஒழிக்க உம்மிடம் நாங்கள் மன்றாட இயலாது. இந்த வளங்களை தேவைக்கேற்ப பயன்படுத்தி பேராசையின்றி நாங்கள் மற்றவா்களோடு பகிா்ந்துகொள்ளும் போது பசியை ஒழிக்க முடியும்.

**பெண்கள்:** எல்லா மனிதா்களுக்குள்ளும் இருக்கின்ற நல்ல காரியங்களை பாா்க்கும்படியாய், நீா் எங்களுக்கு அளித்த கண்களை சரியாய் பயன்படுத்தும்போது, பாரபட்சங்களை ஒழிக்கும்படியாய் நாங்கள் உம்மிடம் மன்றாட இயலாது.

**ஆண்கள்**: சேரிகளை எல்லாம் அகற்றி, மக்களுக்கு நம்பிக்கையை அழிக்கத்தக்க அதிகாரத்தை ஆக்கப்பூா்வமாக பயன்படுத்த நீா் எங்களுக்கு

அளித்திருக்கிறபடியினால், துன்பங்களை அகற்றும்படி நாங்கள் உம்மிடத்தில் மன்றாட இயலாது.

**பெண்கள்:** இரக்கத்துடன் அனைவருக்கும் சுகத்தை கொடுக்கக் கூடிய சிறந்த மனதை நீர் எங்களுக்கு ஏற்கனவே அருளியிருக்கிறபடியால், வியாதியை நீக்கும்படியாய் உம்மிடம் நாங்கள் மன்றாட இயலாது.

**ஆ.ந.:** ஆகவே, கர்த்தாவே எங்களையும், எங்கள் குறைபாடுகளையும் மன்னித்து, நாங்கள் ஜெபிக்கவும், விருப்பப்படவும் மட்டும் இல்லாமல் செயல்படவும் எங்களுக்கு வலிமையையும், உறுதியையும், துணிவையும் தரும்படியாய் நாங்கள் உம்மிடம் மன்றாடுகிறோம்.

**சிறிது நேர மௌனமான தியானம்**

**ஜெபம் (இணைந்து ஏறெடுப்போம்)**

வாரும் தூய ஆவியே,

படைப்புகளை புதுப்பியும்.

எங்களோடும், எங்களது முயற்சிகளிலும்

நீர் அசைவாடி,

எங்கள் திருச்சபை புதுப்பிக்கும்படியாய், எங்களுக்குள்

புது ஜீவன் அருளும்.

உமது நீதி என்கிற நீரோடைகளுடன் இவ்வுலகில் அசைவாடும்.

ஏழ்மையில் உள்ளவர்களுக்கு வாழ்வாகிய நீரையும்,

ஒடுக்கப்படுகின்றவர்களுக்கு, விடுதலையாகிய ஆறுகளையும் அருளும்.

உமது அன்பாகிய நெருப்பால் எங்கள் உள்ளத்தில் அசைவாடும்.

உமது குணப்படுத்துதலின் அரவணைப்பையும், உமது மாற்றுருவாக்கும் அதிகாரமாகிய தீச்சுடரையும் அருளும். ஆமென்.

(டாரதி மெக்ரே - மெக் மெகோன்)

**திருமறைப்பகுதி:** அப்போஸ்தலர் 9 : 36 - 42

**அருளுரை**: "நமக்கும், பிறருக்கும், உலகமனைத்திற்கும் வாழ்வளிக்கும் ஊழியம்."

**பகிரப்பட்ட சிந்தனைகளை செயல்படுத்துவதற்கான வழிகாட்டி**

(தங்களை அடையாளப்படுத்துகின்ற ஏதாவது ஒன்றை (பங்கேற்பாளர்களை) கொண்டு வரச் சொல்லி அதிலிருந்து பின்வருவனவற்றைச் சிந்திக்கும்படியாய் கூறலாம்.)

1) தாங்கள் தங்களுடைய சமூகத்தில் செய்து வருகின்ற தொண்டு, விருந்தோம்பல் மற்றும் நன்மைகளைக் குறித்து பகிரவும்.

2) சோர்வடையும் நேரங்களில் மகிழ்ச்சி, ஆற்றல் மற்றும் புதுவாழ்வை எவ்வாறு கண்டடைவீர்கள்?
3) தங்கள் குழு / சமூகம் / திருச்சபை உங்களை எவ்வாறு ஆதரிக்கிறது?
4) சிறு நாணய ஐக்கிய இயக்கம் தங்களுக்கும், தங்கள் குழு சமூகத்திற்கும் எவ்வாறு வாழ்வளிக்கிறது?

**சிறுநாணய ஐக்கிய காணிக்கைகளை ஆசீர்வதித்து அந்த இயக்கத்திற்காக ஜெபித்தல்:**

**துதிப் பாடல்:**

அனைத்து ஆசீர்வாதங்களையும் அருளும் கடவுளைத் துதியுங்கள்.

வானத்திலும் பூமியிலும் உள்ள அனைத்து உயிரினங்களும் கடவுளைத் துதியுங்கள்.

இயேசுவில் முற்றிலும் அறியப்பட்ட படைப்பாளரும், வார்த்தையும், ஆவியுமாகிய ஒருவரான கடவுளைத் துதியுங்கள். ஆமென்.

**பாடல்:**

**குறிப்பு:** பாடல் பாடும்போது ஆராதனைக்கு முன்பாக ஆயத்தம் செய்யப்பட்ட உருகுலைந்த இயற்கைக் காட்சியை ஒரு சிலர் முன்வந்து ஒழுங்குபடுத்தலாம்.

**அர்ப்பணிப்பின் ஜெபம்**: (இணைந்து ஏறெடுப்போம்)

புற்கள் ஒளியுடன் அமைதியாக இருப்பது போல பூமியே, எங்களுக்கு அமைதியை கற்றுக் கொடு.

பழைய கற்கள் நினைவாற்றலால் பாதிக்கப்படுவது போல,

பூமியே எங்களுக்குத் துன்பத்தை கற்றுக்கொடு.

பூக்கள் தாழ்மையோடு துவங்குவது போல,

பூமியே, எங்களுக்குத் தாழ்மையை கற்றுக்கொடு.

தாய் தனது குழந்தைகளை காப்பது போல,

பூமியே, எங்களுக்கு அக்கறையை கற்றுக்கொடு.

மரம் தனியாக நிற்பது போல,

பூமியே எங்களுக்குத் துணிவை கற்றுக்கொடு.

தரையில் ஊர்ந்து செல்லும் எறும்பு போல,

பூமியே எங்களுக்கு வரம்பை கற்றுக்கொடு.

ஆகாயத்தில் உயரம் பறக்கும் கழுகு போல,

பூமியே, எங்களுக்குச் சுதந்தரத்தை கற்றுக்கொடு.

இலையுதிர் காலத்தில் விழுகின்ற இலைகளைப் போல,

பூமியே, எங்களுக்கு விட்டுக்கொடுத்தலைக் கற்றுக்கொடு.

வசந்த காலத்தில் முளைக்கும் விதையைப் போல,

பூமியே, எங்களுக்கு மீளுருவாக்கத்தை கற்றுக்கொடு.

உருகிய பனி தன் வாழ்வை மறப்பது போல,

பூமியே, எங்களை நாங்களே மறக்க கற்றுக்கொடு.

வறண்ட வயல்கள் மழையில் அழுவது போல,

பூமியே, எங்களுக்கு இரக்கத்தை நினைவில் கொள்ள கற்றுக்கொடு.

(Ute, வட அமெரிக்கர்)

ஆமென். ஆமென். ஆமென்.

**மன்றாட்டு ஜெபம்**

மன்றாட்டு ஜெபத்திற்கான ஜெபக்குறிப்புகளை சேகரிக்கலாம்.

**ஆசீர்வாதம்**

**ஆ.ந.:**

நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க கொண்டுபோகப்படுவீர்கள்;

பர்வதங்களும் மலைகளும் உங்களுக்கு முன்பாகக் கெம்பீரமாய் முழங்கி, வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும். முட்செடிக்குப் பதிலாக தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும். (ஏசாயா 55 : 12-13)

**சமாதானத்தைப் பகிர்தல்:**

**ஆசீர்வாத ஜெபம்** (அனைவரும் கரம் கோர்த்து இணைந்து கூறுவோம்)

படைப்பில் நடனமாடும் கடவுளே,

மனித அன்புடன் நம்மை அரவணைப்பவரே,

இடியைப் போல நம் வாழ்வை அசைப்பவரே,

அவளது நீதியினால் இவ்வுலகை நிரப்ப,

எங்களை உமது வல்லமையினால் நிரப்பி, ஆசீர்வதித்து அனுப்பும்.

(ஜேனட் மோர்லே)

**பின்பவனி**